**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, THARANGAMBADI.**

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXV of BNSS)

**C.C.No. 31-2019**

| | | | |
|---|---|---|---|
| Deposition of LW 1 | | Examined as : PW 1 | |
| Name | : ஆனந்தன் | Defence | : |
| Father/Husband Name | : முத்து | Court | : |
| Village | : காழியப்பநல்லூர் | Taluk | : |
| Calling | : | | |
| Age | : 40/2026 | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act Bharathiya Shakshiya Adhiniyam the day 04.03.2026.

சத்தியபிரமாணம் பெறப்பட்டது.

எதிரி ஆஜர்.

**முதல் விசாரணை:–**

நான் மேற்கண்ட முகவரியில் வசித்து விவசாய வேலை செய்து வருகிறேன். கடந்த 2012ம் ஆண்டு ஒரு நாள் மாலை 04.00 மணியளவில் எனது அப்பா வீட்டிலிருந்து வயலுக்கு காழியப்பநல்லூர் மெயின்ரோட்டில் தெற்கில் இருந்து வடக்கு நோக்கி சென்றுகொண்டிருந்தபோது அதே திசையில் எனது அப்பாவிற்கு பின்னால் தெற்கில் இருந்து வடக்கு நோக்கி வந்த லாரி எனது அப்பா மீது மோதி விபத்து ஏற்பட்டதாக நான் வயலில் இருந்த போது எனக்கு போன் செய்து சொன்னார்கள். நான் உடனடியாக சம்பவ இடத்திற்கு சென்று பார்த்தபோது எனது அப்பாவிற்கு காலிலும், நெஞ்சிலும் அடிப்பட்டு கிடந்தார். நான் அவரை ஆட்டோவில் வைத்து மயிலாடுதுறை அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றேன். எனது அப்பாவை பரிசோதித்த மருத்துவர் அவர் வரும் வழியிலேயே இறந்துவிட்டதாக கூறினார். விபத்து ஏற்படுத்திய லாரியை ஓட்டிய ஓட்டுநர் யார் என்று எனக்கு தெரியாது. எனது அப்பாவிற்கு ஏற்பட்ட விபத்து குறித்து நான் பொறையார் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன். நீதிமன்றத்தில் தற்போது என்னிடம் காட்டப்படும் புகார் மனுவில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். அந்த **புகார் மனு அசாஆ 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

நான் எனது முதல் விசாரணையில் சொல்லியுள்ள விபரங்களை தான் போலிசார் விசாரணையில் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். புகாரை யார் எழுதினார்கள் என்றால் எனது மாமா தான் எழுதினார். புகாரில் உள்ள விபரங்கள் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. சம்பவம் பற்றி எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான்.

**மறுவிசாரணை இல்லை.**